நிலக்கோட்டை வட்டாரத்தில் சிவந்திப்பூ உற்பத்தி

*787 வினா. திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டாரத்தில் தரம் மிக்க "சிவந்திப்பூ" அதிகம் உற்பத்தியாகிற தென்பது உண்மையா?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டாரத்தில் சுமார் 300 எக்கர் பரப்பளவில் சிவந்திப்பூ பயிரிடப்படுகிறது.

திரு. தி. பொன்னுமலை : நிலக்கோட்டை பகுதியில் சிவந்திப்பூவை விட கனகாம்பரம் நன்றாக வளர்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கனகாம்பரம் கோயம்பத்தூர், சென்னை, மதுரை முதலிய இடங்களில் 300 எக்கராக்களில் பயிரிடப்படுகிறது. மேலும் பயிரிடுவதற்கான திட்டம் இப்போது இல்லை.

திரு. த. சோனையா : மதுரை மாவட்டம் நிலக்கோட்டைப் பகுதியில் சிவந்திப்பூ அதிகமாக உற்பத்தி செய்வதாகச் சொன்னார்கள். அந்தப் பகுதியில் உற்பத்தியாகிற பூக்களுக்கு மார்க்கெட் இல்லாத காரணத்தினால், அவற்றை வெளி மாநிலங்களுக்கு அனுப்ப அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இப்போது வளர்க்கப்படுகிற சிவந்திப்பூக்களில் ஆயிரம், ஆயிரத்து ஐநூறு லாபம் வருவதாகச் சொல்லுகிறார்கள். இந்தியாவில் உள்ள பல மாநிலங்களுக்கு லாரி மூலமும், பஸ் மூலமும், விமானம் மூலமும் இப்போது அனுப்பப்பட்டு வருகிறது. வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் திட்டத்தையும் இப்போது ஆராய்ந்து வருகிறார்கள்.

திரு. சொ. காவேரி மணியம் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மதுரையின் தென்பகுதியிலே இம்மாதிரியான வாசனை மிகுந்த பூக்கள் பயிரிடப்படுகின்றன. அகில பாரதம் முழுவதற்கும் விமானம் மூலம் பூக்கள் அனுப்பப்படுகின்றது. ஆகவே அதைப் பயிரிடுபவர்களுக்கு மானியம் ஏதாவது தரப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, வாசனைப் பொருள்களுக்கென்று தனியாக மானியம் ஒதுக்கவில்லை. மல்லிகை, ரோஜா, சிவந்தி போன்றவைகளுக்கு நீண்ட காலக் கடனாக 3 ஆயிரம் ரூபாயும், குறுகிய காலக் கடனாக மல்லிகைக்கு 800 ரூபாயும், ரோஜாவுக்கு 450 ரூபாயும், சிவந்திக்கு 150 ரூபாயும், கனகாம்பரத்துக்கு 140 ரூபாயும் உதவிப் பணம் தர பரிசீலிக்கப்படுகிறது வாசனைப் பொருள்களுக்கென்று தனியாக மானியம் எதுவும் தரப்படவில்லை